## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 198 of 2020** |
| Deposition of witness | : | **DW1** |
| Name | : | **பழனியம்மாள்** |
| Husband Name | : | **தங்கமுத்து கவுண்டர்** |
| Age | : | **67** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.01.2026

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் நாச்சிமுத்து கவுண்டரின் மூத்த பெண் மகள் என்றால் சரிதான். எனக்கு அந்த சமயத்தில் தமிழ் ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் ஆங்கிலத்தில் தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். நான் ஊத்துக்குளி ஆர் எஸ் எஸ் வசித்து வருகிறேன். எனது பூமியும் வாதி பூமியும் கலராகிவிட்டதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த எதிர் உரையில் இன்று வரையில் பூமி பாகம் பிரிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன்னா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

2. டிசம்பர் 1996 எழுதப்பட்ட வா.சா.ஆ1ல் ஏ ஜாபிதா சொத்து பழனிச்சாமிக்கும், பி ஜாபிதா சொத்து பழனிச்சாமியின் மகளான பூங்கொடி, காந்திமதி மற்றும் ஆனந்திக்கும், சி ஜாபிதா சொத்தானது பெரியசாமிக்கும், பொன்னியம்மாள், ஜெயந்தி, வாதிக்கும் மற்றும் டி ஜாபிதா சொத்து பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்து பாகக்காரர் செய்யப்படவில்லை என்று முன்னர் சொல்லிவிட்டு தற்போது பாகப்பிரிவினை 1996 ஆண்டில் ஆகிவிட்டதாகவும் ஒப்புக்கொண்டு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

B DHARANEETHER Digitally signed by B DHARANEETHER Date: 2026.01.27 17:13:36 +0530

3. வருவாய்த் துறையில் இன்றைய தேதி வரையில் எனது பெயருக்கு வருவாய் துறை ஆவணங்கள் மாற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் பேரில் கடன் பெற்று, கடன் கட்ட தவறிய காரணத்தினால் பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் எனது பங்கு அட்டாச் செய்யப்பட்டு இன்றுவரையில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, நான் கட்டி மீட்டு விட்டேன். ஆனால் அவ்வாறு நான் மீட்டதாக, வில்லங்க சான்றில் வரவில்லை என்றால் தவறு. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தையும் பெரியசாமி தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல

4. நான் அந்த சமயத்தில் தொட்டிபாளையத்தில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு எனது பங்கிற்கு வரும்போது எல்லாம் வாதி மற்றும் வாதியின் பெரியப்பா வீட்டில் தங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. ஏற்கனவே எங்களுக்குள் சொத்து சம்பந்தமாக அழுதடி ஏற்பட்டு நான் சிறையில் இருந்தேன் என்றால் அந்த வழக்கு எங்களுக்கு சாதகமாக முடிந்து விட்டது. நான் அந்த வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்து ஜப்தியில் உள்ளதால் எனது பெயருக்கு எந்த ஒரு ஆவணத்தையும் பெயர் மாற்ற முடியாத காரணத்தினாலும், ஆனால் வாரி அவரது பெயருக்கு சொத்துக்களை மாற்றி அனுபவித்து வருவதாலும் அவர் மீது வேண்டுமென்றே பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியில்ல. ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்ட காரணத்தினால், மீண்டும் அதே சொத்தில் பங்கு கூறுவது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

**(வாதியின் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.27 17:18:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.